முச்சந்தி முரளி



"தானே நடக்க வழியில்லாமல் இருக்கிறவர் தன்னோட சேர்ந்து மற்றவையையும் கவிழ்க்கிற பிளான் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 214

வியாழக்கிழமை
27 ஜூன் 2024

ஆனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# ஆசிரியர்கள், அதிபர்களின் போராட்டத்தில் களேபரம்!



## நீர்த்தாரை, கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு இன்றும் போராட்டம் தொடரும்

**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் நீர்த்தாரைத் தாக்குதலும், கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சும் நடத்தப்பட்டுள்ளது.**

15



# என்னுடன் பயணிப்பதா? எதிரணியுடன் பயணமா?

## மக்களின் கைகளில் முடிவு ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 27**

**நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்த என்னுடன் பயணிப்பதா? அல்லது இருளில் அதிகாரத்தை தேடிக்கொண்டிருக்கும் எதிரணியுடன் பயணிப்பதா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

15

## கல்விச் செயற்பாடு இன்று வழமையாம்

கல்வி அமைச்சு அறிவிப்பு

கல்விசாரா ஊழியர்கள் போர்

## துணைவேந்தர்கள் கொழும்புக்கு அழைப்பு

## ஜூலை 2ஆம் திகதி அரசியல் திருப்பம்?

விரிவுகள் :- பக். 15

கடற்படைச் சிப்பாய் பலி

## தமிழக மீனவர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 27

நெடுந்தீவு கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீன்பிடிப் படகு மோதியதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததை கொலையாகக் கருதி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

15



## வீதியைச் சீரமைக்குமாறு வலியுறுத்திப் போராட்டம்

### வெயிலில் காய்ந்த மாணவர்களை சந்திக்காது சென்றார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொடிகாமம் - தட்டாங்குளம் வீதியைச் சீரமைத்துத் தருமாறும், நீண்டகாலமாக அந்த வீதி சீரமைப்பின்றி

15

## தம்மிக்கவை களமிறக்க பெரமுன முடிவாம்!

கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை ஆதரிக்கும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுக்கவுள்ளது என நம்பகரமான அரசி

15



மாங்குளத்தில்

## கோரவிபத்து; மூவர் சாவு!

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு - மாங்குளத்தில் பேருந்தும், லொறி ஒன்றும் விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து, திருத்தவேலை

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் உரை கபட நாடகமே!



## எதிரணிகள் சாடல்

**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள உரையானது தேர்தல் நாடகமே என்று எதிரணிகள் சுட்டிக்காட்டியுள்ளன.**

களனி ஆற்றிலிருந்து நாகம் வருகின்றதெனக் கூறி கோத்தாபய ராஜபக்ச வாக்குவேட்டை நடத்திய நாடகத்தின் 2 ஆம் பாகமாகவே ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு அமையும்.

நாடுவங்குரோத்துநிலையிலிருந்து மீண்டு விட்டது என அவர் கூறியுள்ளார். ஆனால் நாடு மீண்டு விட்டது என்ற அறிவிப்பை அவர் இதற்கு முன்னரும் விடுத்திருந்தார். எனவே,தேர்தல் நாடகமாகவே இது அரங்கேற்றப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தற்போது வங்குரோத்து நிலையில் இருந்து நாடு மீண்டுவிட்டது எனக் கூறி பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து விழா எடுக்கப்படவுள்ளது.

நாடுவங்குரோத்துநிலையிலிருந்து மீண்டுவிட்டது எனக் கடன் வழங்கும் நிறுவனங்கள் பட்டியலிடவில்லை. எனவே, இந்தக் கண்துடைப்பு நாடகத்தை மக்கள் நம்பக் கூடாது என்று தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# மின்சாரம் தாக்கி மாணவன் சாவு!

கொழும்பு, ஜூன் 27

கல்கிரியாகம - திக்வெண்ணாகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய குறித்த மாணவன் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் நிலையிலே இந்தத் துயரம் நிகழ்ந்துள்ளது.

தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலியில் ஏற்பட்ட மின்சார கோளாறை சரிசெய்வதற்கு முற்பட்ட போதே மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# ஓஷலவும் தேர்தலில்



கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 'புதிய சுதந்திர முன்னணி' சார்பில் சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் போட்டியிடவுள்ளார்.

ஓஷல ஹேரத் தமது ஜனாதிபதி வேட்பாளராக முன்வைக்கப்படுவார் என புதிய சுதந்திர முன்னணி அறிக்கையொன்றின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பில் சர்ச்சையை ஏற்படுத்தியதில் ஓஷல ஹேரத் பிரபல்யமாக அறியப்படுகின்றார். ஓஷல ஹேரத் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கமையவே பின்னர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பிரித்தானிய குடியுரிமை காரணமாக இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நாடு மீண்டுவிட்டதென மக்களை ஏமாற்றாதீர்!

## ஹர்ஷன எம்.பி. தெரிவிப்பு

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாக ஜனாதிபதியோ வேறு அமைச்சர்களோ யாரும் அறிவிப்புச் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களே நாடு மீட்சியடைந்தமையை உறுதிப்படுத்தவேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், தற்போது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளது என்ற தகவலை வெளியிட அரசாங்கம் முனைகிறது. எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை ஆய்வுசெய்தசர்வதேசதர நிர்ணய நிறுவனங்களே எமது நாடு வங்குரோத்து என்ற அறிவிப்பை வெளியிட்டது.

எனவே, நாட்டு மக்கள் கோத்தாபயவிடம் ஏமாந்தது போன்று மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவிடன் ஏமாறமாட்டார்கள்- என்றார். (ச-இ)

# பாலின சமத்துவத்தை தே.ம.சக்தி ஆதரிக்கும்



கொழும்பு, ஜூன் 27

ஓரினச்சேர்க்கை உறவை தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றமற்றதாக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டவரைவுக்கு எமது கட்சி ஆதரவளிக்கும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாம் அண்மைக்காலமாக இந்தச் சமூகம் தொடர்பில் வாதிட்டு வருகிறோம். அவர்களும் இந்தச் சமூகத்தில் ஓர் அங்கம்.

தனிநபர்கள் பாலின அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கிறோம். இந்த ஒரே பாலின உறவுகள் எங்கள் தண்டனைச் சட்டத்தில் குற்றமாக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும்.

விலங்குகளுடனான பாலியல் உறவுகள் மட்டுமே குற்றமாகும். எனவே, இந்தச் சட்டவரைவு தொடர்பான மூன்றாவது வாசிப்பின் போது தேசிய மக்கள் சக்தி இதனை ஆதரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# தம்மிக்கவே பொருத்தம்



## நாமல் யோசனை

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஆதரவளிக்க வேண்டுமென அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவின் அணியினர், கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

மொட்டுச் சின்னத்தின்கீழ் போட்டியிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாரில்லை. இதற்கு தம்மிக்க பெரேராவே பொருத்தமானவர் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ச தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை. (ச-44)



# தக்காளி ரூ.1000

கொழும்பு, ஜூன் 27

கடந்த காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

ஒரு கிலோ தக்காளியின் விலை 900 முதல் 1,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், முருங்கைக்காய் ஒரு கிலோ 1,100 ஆகவும், கிழங்கு ஒரு கிலோ 900 - 1,000 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதுடன் ஏனைய மரக்கறி வகைகளின் விலைகளும் எகிறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# நீதித்துறையைக் கட்டுப்படுத்த நாடாளுமன்றுக்கு அதிகாரமில்லை

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 27

நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற பெயரில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நாடாளுமன்றம் தலையிடமுடியாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 19ஆம் திகதி நீதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரை நீதித்துறையில் மக்கள் வைத்திருக்கும் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது.


நீதித்துறையை கட்டுப்படுத்தும் அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதில் நாடாளுமன்றம் தலையிடக்கூடாது.

எந்தவொரு நீதித்துறை அதிகாரி மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான கூற்றுகள் சட்டத்தை நிலை நாட்டுதல்,சுயாதீன நீதித்துறை என்பவற்றில் ஆதாரமற்ற தலையீடுகளை மேற்கொள்ள வழிவகுக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்மறுசீரமைப்பு சம்மதித்தது சீனா



**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பதற்கு சீனா சம்மதம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு முயற்சிகளில் சீனாவுடனான மறுசீரமைப்பே சில சிக்கல் நிலைகளை எதிர்கொண்டிருந்தது. இந்த நிலையில், சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேச்சின்போது கடன் மறுசீரமைப்புக்குச் சீனா முற்றாக சம்மதம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

சீன அரசுடனும், சீன எக்ஸிம் வங்கியுடனும் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுகள் வெற்றி பெற்றுள்ளன என்றும், நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் இது நற்செய்தி எனவும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## பிரிட்டன் தேர்தலில் இலங்கையர் நால்வர்

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட நான்கு பேர் போட்டியிடுகின்றனர்.

37 வயதான ரணில் மல்கம் ஜெயவர்த்தன பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார். இவர் ஏற்கனவே பிரதி வர்த்தக அமைச்சராகவும், சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்துள்ளார். இடதுசாரிக்கட்சியின் சார்பில் சியா யூசுப் போட்டியிடுகிறார். இவர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய நண்பராவார்.

சரித் குணவர்த்தன ஏற்கனவே லண்டனில் உள்ளூராட்சி உறுப்பினராக இருந்தவர் இவர் பசுமைக்கட்சி சார்பில் களமிறங்கியுள்ளார். தொழிற்கட்சியின் உமா குமாரன் சார்பில் போட்டியிடுகிறார். இவர் 2017 ஆம் ஆண்டு தெற்காசியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஹரோ தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர். (ச-25-6)

## போலி நாணயத்தாள் வீட்டில் அச்சடித்த மாணவன் கைது

தம்புத்தேகமவில் 17 வயதுடைய பாடசாலை மாணவன் 6 போலியான 500 ரூபா நாணயத்தாள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் பேருந்து நிலையத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியபோது அவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் அவரது வீட்டைச் சோதனையிட்டபோது வீட்டில் இருந்து ஏராளமான போலி பணம் அச்சடிக்கும் கருவிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச–இ)

## குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

மட்டக்களப்பில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மன்னாரைச் சேர்ந்த சூ. அந்தோனிப்பிள்ளை (வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே தவறானமுடிவெடுத்துஉயிரிழந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப்பரிசோதனைக்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-213)

## தரம்குறைந்த மின்கம்பிகள்

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மின் கம்பிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மின் கம்பிகள் செப்புக் கம்பிகளினால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவேண்டும் எனவும் இந்தத் தரம் குறைந்த மின் கம்பிகளை உற்பத்தி செய்ய அலுமினியம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின் கம்பிகளை பயன்படுத்துவதனால் மின்சார இயந்திரங்கள் பழுதடைவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் போலியான தரம் குறைந்த மின் கம்பி உற்பத்திகள் சந்தையில் விற்பனை செய்வது குறித்து இலங்கை நுகர்வோர் விவகார அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ச–இ)


## விசா செல்லுபடிக்காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் காலாவதியாகும் கடவுச்சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நவம்பர் முதலாம் திகதி முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. சாதாரண கடவுச்சீட்டு வைத்திருப்போர் விரைவாக இலத்திரனியல் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். கடவுச்சீட்டின் காலம் 10வருடங்களைக் கடந்த பின்னரும் அதற்கு ஒரு வருட செல்லுபடியாகும் காலம் வழங்கப்படுமாயின் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கப்படும் வரை மாத்திரமே இந்த நீடிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ச-25-125)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தினம் தெரியுமோ?

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்'

என்டு வள்ளுவர் சொன்னதை நாங்கள் கனகாலமா மறந்திட்டம். அதாலதான் இப்ப சின்னன்பொன்னனுக்கெல்லாம் வாயில உச்சரிக்க முடியாத புதுப்புது வருத்தங்களெல்லாம் வருகுது. இப்பத்தை ஆக்கள் நாப்பது வயது வந்தவுடனையே நோஞ்சானுகள் மாதிரி கிடக்கேக்க, 'உதெல்லாம் இப்பத்தை கூப்பன்மா சாப்பாட்டால வந்த வில்லங்கம். எங்கட காலத்துச் சாப்பாடு என்டா இப்பவும் உடம்பு நிண்டுபிடிக்கும்' என்டு பழைய ஆக்கள் குத்திக்காட்டுறவை, ஆனால் அவையின்ர குத்தல்களுக்கு முடிவுகட்டுறமாதிரி வந்ததுதான் 'அம்மாச்சி'. இலங்கை முழுக்க ஒரு சிங்களப் பேரோட வந்த இந்தத் திட்டத்தை அப்ப மாகாண சபையில அமைச்சரா இருந்த ஐங்கரநேசன்தான், அம்மாச்சி என்ட பேரோட இஞ்ச கொண்டந்தவர். பேரை மாதிரியே, அங்க செய்யிற சாப்பாடெல்லாம் பழங்காலத்தை நினைவுபடுத்துறமாதிரி, சத்தான தாயும் ரேஸ்ட்டாயும் இருக்கெண்டு சனமெல்லாம் அம்மாச் சியின்ர வாடிக்கையாளரா மாறிட்டினம். அதோட இந்த அம்மாச்சிக் கடையளில பெண் தலைமைத் துவக் குடும்பத்தில இருக்கிறவைதான் சாப்பாடு செய்யினம். அதால அவைக்கும் ஒரு நிரந்தரவருமானத்தைக் குடுக்கிற புண்ணியமும் அம்மாச்சிக்கு இருக்கு.

இப்ப அம்மாச்சி என்டாலே சனத்திட்ட நல்ல மதிப்பு. எங்க அம்மாச்சி சாப்பாட்டுக்கடையைப் போட்டாலும், அங்க போறதுக்கு நிறையப்பேர் ரெடியா இருக்கினம். கிட்டடியில கோப்பாயில திறந்த அம்மாச்சியிலையும் இப்ப கூட்டம் அள்ளுது. இந்தச் சூடுமாறமுதலே சங்கானையிலையும் முந்தநாள் அம்மாச்சி சாப்பாட்டுக்கடை திறந்தவை. அங்கையும் திறப்பு விழாவிலையே நல்ல கிறவுட். 'இனி எங்கட ஏரியாவிலையும் நல்ல சத்தான சாப்பாடு வாங்க ஒரு கடை வந்திட்டுது' என்ட சந்தோசத்திலதான் அழைக்காமாலேயே அவ்வளவு பேரும் வந்தவை. என்டாலும் முதல்நாளே சில விசயங்கள் சங்கானை அம்மாச்சியில லைட்டா உறுத்தாமலும் இல்லை. முக்கியமா, அம்மாச்சி என்டாலே சாப்பாட்டில மட்டுமில்லாமல் அதை பொதி செய்யிற விதத்திலையும் பாரம்பரிய முறையளைத்தான் பாவிக்கிறவை. சாப்பாடுகளை வாழையிலையில சுத்திக்குடுக்கிறது, சொப்பிங்பை பாவிக்காமல் இருக்கிறது என்டு அம்மாச்சிக்கென்டே சில தனித்துவங்கள் இருக்கு. ஆனால் சங்கானை அம்மாச்சியில எல்லாச் சாப்பாடும் சொப்பிங் பையிலதான் போட்டுக்குடுத்தவை.

மற்றது, முதல்நாள் அங்க வித்த வடையே புளிச்சுப் போட்டுது. ஆசையா வடை வாங்கின எல்லாரும் ஒரு கடி கடிச்சுப் போட்டு, 'வடை போச்சே' என்டு எறிஞ்சுபோட்டினம். சாப்பாடுகளின்ர தரத்தில கவனமா இருந்தாத்தான் பிறகும் ஆக்கள் வருவினம். இப்பிடிச் சின்னச் சின்னக்குறையளை இனியும் வரவிடாமல் பாத்தால்தான் அம்மாச்சியின்ர மதிப்புக் கெடாமல் பாக்கலாம். உரியவை உதுகளைக் கவனிச்சு, அம்மாச்சியை சங்கானையிலையும் 'ஆகா, ஓகோ'என்டு சனம் புகழ்றமாதிரி பாக்கவேணும்.



-பட்சி

padsi@uthayan.com

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். பிணக்குகள் நீங்கும். தந்தையிடம் பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களுடன் மனவருத்தம் ஏற்படக் கூடும் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்கலாம். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண் அலைச்சல் ஏற்படலாம். உடல் அசதி உண்டாகவும் கூடும். உற்சாகம் பெறுவீர்கள். விநாயகர் வழிபாட்டால் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும். மனதில் சற்று குழப்பம் ஏற்பட்டு நீங்கும். முருகப்பெருமானை வழிபட மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும். அம்பிகை வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.


**விருச்சிகம் :** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மனஸ்தாபம் நீங்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைதரும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். விநாயகரை வழிபடுவதன் மூலம் சிரமங்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.





கிளிநொச்சி புனித அந்தோனியாரின் வருடாந்த திருவிழா அண்மையில் நிறைவேறியது. திருவிழா திருப்பலியை பங்குத்தந்தை அருட்பணி யு.ஏ. சில்வஸ்டார் தாஸ், உதவி பங்குத்தந்தை அருட்பணி ராஜ் டிலக்சன் அடிகளார், குருநகர் பங்குத்தந்தை அருட்பணி ஜாவிஸ், கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி சகாய நாயகம், அருட்பணி ஜேம்ஸ் நாதன், அருட்பணி இமானுவேல், அருட்பணி செபமாலை பெரேரா, அருட்பணி தர்ஷன் ஆகியோர் இணைந்து நடத்தினர். (ச-25)



'பார்மட்' நிறுவனத்தின் அனுசரணையில் 'மாற்றுத்திறனாளிகளைச் சமூக மட்டத்தில் புனருத்தானம் செய்தல்' எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் முதியோர் சமாச அங்கத்தவர்கள், மாற்றுத்திறனாளிச் சமாச அங்கத்தவர்கள் மற்றும் இளைஞர் கழக அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25- 66)

# விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால், கலை, இலக்கியத்துறைகளில் சேவையாற்றியவர்களுக்கான வருடாந்த கலைவாரிதி விருது மற்றும் இளம் கலைஞர் விருது ஆகியவற்றை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த கலை, இலக்கியத்துறைகளில் சேவையாற்றி வருகின்ற 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் கலைவாரிதி விருதுக்கும், 25 தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்கள் இளம் கலைஞர் விருதுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவத்தினை வேலணை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி, கிராமசேவையாளரிடம் உறுதிப்படுத்தி, கலைச்சேவையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களையும் இணைத்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வேலணைப் பிரதேச கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு பேரவையின் தலைவர் க.சிவகரன் தெரிவித்துள்ளார். (25)

# நடேஸ்வராக் கல்லூரி கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வலிகாமம் கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுகளின் வரிசையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி சம்பியனை தனதாக்கியுள்ளது.

இரண்டாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயமும், நான்காம் இடத்தை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (ச-555)



## மணவாளக்கோலம்

யாழ்., ஜூன் 27

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேக தினமும் மணவாளக் கோல உற்சவமும், இன்று வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளன.

நாளை காலை 8.30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகமும் நடைபெறும். மாலை திருக்கல்யாணம் இடம்பெற்று, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருவீதி வலம் வரும் திருக்காட்சி யும் இடம்பெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனசக்தி லைஃப் வருடாந்த விருதுகள் 2024

JANASHAKTHI Life


ஜீ சீ ஜே கஸாரச்சி
தலைவர் விருது பெற்றவர்


ஜனசக்தி வருடாந்த விருதுகள் விழா 2024 – பிரதான விருதுகளை வென்றவர்கள்





## "உன்னதத்தை நோக்கி" அதீத திறமைகளை வெளிப்படுத்தியவர்களை விருது வழங்கி கௌரவித்தது

இவ்விருதுகள் விழாவானது 2024 ஜூன் மாதம் 6 ஆம் திகதி கொழும்பு ஷங்ரிலாவில், "உன்னதத்தை நோக்கி" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது. ஜனசக்தி லைப் நாடளாவிய ரீதியல் அமைந்துள்ள கிளைகளின் விற்பனை ஆலோசகர்கள், குழு பமுகாமையாளர்கள், தொடர்பாடல் அதிகாரிகள், குழுத் தலைவர்கள், பிராந்திய முகாமையாளர்கள், மற்றும் வலய முகாமையாளர்கள் உட்பட அதிசிறந்த 140 க்கும் அதிகமானவர்களது திறன் வெளிப்பாடுகள் இங்கு கௌரவிக்கப்பட்டதுடன், இம்முறையும் வெளிநாட்டு சவாரிகள் அடங்கிய தன்னிகரற்ற பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பிரதித் தலைவர் பிரகாஷ் ஷாப்டர், ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி லியனகே, மற்றும் ஜனசக்தி குழும நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் / குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஷாப்டர் உட்பட இன்னும் பலர் அதிதிகளாக இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

ஜனசக்தி லை.'.ப் பயணத்தின் புதிய அத்தியாயமாக உருவெடுக்கும் தமது விற்பனை அணியினரின் அதிசிறந்த தேர்ச்சி மட்டம் மற்றும் செயற்றிறன் பற்றிய மதிப்பீடுகள் பலவற்றுடன் ஜனசக்தி லை.'.ப் வருடாந்த விருதுகள் விழா 2024 இனிதே நிறைவுற்றது.









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் கடற்றொழிலாளரை வஞ்சிக்கின்றது

யாழ்ப்பாணம் மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாண கடற்றொழிலாளர் விடயங்களில், மாற்றான் தாய் மனப்பாங்குடன் இலங்கை அரசாங்கம் அக்கறையின்றிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று வடமாகாண மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடமாகாண மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக, இலங்கைக் கடற்படையின் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒவ்வொரு மனித உயிரும் பெறுமதியானது. இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதற்காகத்தான் நாம் நீண்டகாலமாக இரண்டு நாடுகளின் தலைவர்களிடமும் வலியுறுத்தி வருகின்றோம்.

மீனவர்களுடன் டில்லியில் ஏற்பட்ட சந்திப்பின் தீர்மானத்தை இரு நாட்டு அரசாங்கங்களும் நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று இந்த உயிர்பிரிந்திருக்காது. இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் இவ்வாறான துர்ச்சம்பவங்கள் ஏற்பட்டிருக்காது.

இனியாவது அத்துமீறிய மீன்பிடியை தமிழக மீனவர்கள் மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சில தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இறப்புகள் சம்பவிக்கவேண்டும் என்று அவசியம் இல்லை - என்றார். (ம-125)

## எல்லைதாண்டினால் ஆபத்து

ராமேஸ்வரம் அதிகாரிகள் எச்சரிப்பு

சென்னை,ஜூன் 27

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கடந்த ஒரு வாரத்தில் 30க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அடுத்தடுத்து ஸ்ரீலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டு வருவதன் எதிரொலியாக எல்லையைத் தாண்டிச் செல்ல வேண்டாம் என ராமேஸ்வரம் மீன் வளத்துறை அதிகாரிகள் ஒலி பெருக்கி மூலமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மூன்று விசைப்படகுகளுடன் 22மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படை கைது செய்தது.

அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் 10 நாகை மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)

## ஜப்பானுக்கு அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 27

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜுலை முதலாம் திகதி ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவாவின் அழைப்பின் பேரில் அவர் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிமாசா ஹயாஷி உட்பட்ப பல பிரதான பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## கண்ணீர் அஞ்சலி

### திரு.பொன்னுத்துரை கமலநாதன்



தோற்றம் 13.05.1947 மறைவு 25.06.2024

சைவபரிபாலன சபையின் ஆயுள்கால உறுப்பினரும், முன்னாள் பரீட்சை செயலாளருமாகிய திரு.பொன்னுத்துரை கமலநாதன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.


நிர்வாகம்

இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (CS 829) V-1

சைவபரிபாலன சபை



## மரண அறிவித்தல்



மண்ணில் 13.05.1947 விண்ணில் 25.06.2024

### பொன்னுத்துரை கமலநாதன்

(இளைப்பாறிய அதிபர், யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)

தாவடியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கமலநாதன் நேற்று முன்தினம் (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திரமதியின் அன்புக் கணவரும், பால்ராஜ் (கனடா), பவானி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சில்வியா (கனடா), தயானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், றெபேகா, தீபிகா, அசானி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், சந்திரநாதன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம்), ஜெகநாதன் (ஜேர்மனி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரதி (இளைப்பாறிய பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெகசோதி (ஜேர்மனி), காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2024) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்

(CS/830) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தந்திரசாலியும் வேட்டைக்காரனும்

நாடு மீண்டுமொரு கொந்தளிப்பான காலகட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. 'அரகலய' போராட்டத்தின் விதை எப்படிக் கருக்கொண்டதோ ஏறக்குறைய அதே கொதிநிலையில்தான் இலங்கை இப்போதும் இருக்கிறது. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களும் அரசாங்கத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கியபடியுள்ளன. போதாக்குறைக்கு அதிபர், ஆசிரியர்கள் நேற்று நடத்திய பேரணியை இரும்புக்கரம் கொண்டு அரசாங்கம் அடக்க முற்பட்டதால் அந்தப் போராட்டம் இன்னும் வீரியமாகி, நாளையும் தொடருமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில், நேற்று மட்டுமே இந்தப் போராட்டம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் ,சும்மா கிடந்த சங்கை அரசாங்கம் ஊதிக்கெடுக்க, அது பற்றியெரியும் பெருநெருப்பாக எரியத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், இப்படியான போராட்டங்கள் 'குணங்கொள்ளத்' தொடங்கியிருப்பது சில சந்தேகங்களையும் எழுப்பச் செய்கின்றது. அரசியலில் உள்ள அத்தனை நெளிவுசுழிவுகளையும் தனக்குச் சாதகமானதாக மாற்றும் வல்லமை கொண்டவரென வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரசிங்க, இப்படி நாலாபுறமும் போராட்டங்கள் மையங்கொள்வதையும், அவை அணையாமல் நீடிப்பதையும் எப்படி அனுமதித்தார் என்ற சந்தேகம் அவற்றுள் முதன்மையானது. ஒற்றை நாடாளுமன்ற ஆசனத்தோடு அரசியல் களத்தில் இம்முறை உள்நுழைந்த ரணில், நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பான சூழலைத் தனக்குச் சாதகமாக்கியே இப்போது ஜனாதிபதிக் கதிரையிலும் உட்கார்ந்திருக்கிறார். என்னதான் 'நாட்டை முன்னேற்றிவிட்டேன், வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டுவிட்டேன், என்னைத் தவிர எவரும் உங்களை மீட்க முடியாது, ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் எனக்கு அளிக்கப்போகும் வாக்குகள் என் வெற்றிக்கானதல்ல உங்கள் வெற்றிக்கானது' என்று வார்த்தை ஜாலங்கள் செய்தாலும், வாக்கரசியலில் நேரடியாகத் தன்னால் ஜனாதிபதிக் கதிரையைக் கைப்பற்றமுடியாது என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். அதனால் மீண்டும் குழம்பிய குட்டைக்குள் தன்னுடைய வித்தையைக் காட்டி வில்லங்கம் செய்ய முடிவெடுத்துவிட்டார். அதனால்தான் இந்தத் தொழிற்சங்கப் போராட்டங்களை முடிவுக்கு கொண்டுவராமல் அவற்றை நீடிக்கச் செய்வதில் ஆர்வமாக இருக்கிறார்.

வேட்டைக்காரர்கள் எப்போதும் ஒரேவிதமான உத்தியை வேட்டையில் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் ஒரேவிதமாகவே எப்போதும் வேட்டையாடினால், காலப்போக்கில் அதற்கேற்ப விலங்குகள் தங்களையும், தங்கள் நகர்வுகளையும் தகவமைத்து, வேட்டைக்காரர்களையே உச்சிவிடும். அதனாலேயே நல்ல வேட்டைக்காரர்கள் வெவ்வேறு உத்தியோடு காட்டுக்குள் நுழைவார்கள், வெற்றியுடன் வருவார்கள். ரணில் என்னதான் பெரிய அரசியல் சாணக்கியனாக இருந்தாலும், குழம்பிய குட்டைக்குள் கோத்தாபயவைக் கலைத்துவிட்டு ஜனாதிபதியானதைப் போன்று, அதே உத்தியைப் பயன்படுத்தி இன்னும் ஐந்து வருடங்களுக்கு அதே ஜனாதிபதிக் கதிரையில் குந்திக்கொண்டிருப்பதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவுதான். காட்டுவிலங்குகளே வேடர்களின் தந்திரங்களைக் கண்டறியும்போது, மக்கள் மட்டும் அதனை உணராமல் இருப்பார்களா? ரணில் நல்ல தந்திரசாலியாக இருக்கலாம், ஆனால், நல்ல வேட்டைக்காரன் இல்லை. அதை அவருக்கு இந்த ஜனாதிபதித்தேர்தலில் காலம் உணர்த்தும், மக்களும் உணர்த்துவர்.



# எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவை மாற்றம்?

**கொழும்பு, ஜூன் 27**

**எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என அரசியல் வட்டாரங்களில் தகவல்கள் கசிந்துள்ளன.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அரசியல் கட்சிகள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

அதேவேளை சாத்தியமான மறுசீரமைப்பு, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் திட்ட மிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையானது வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தயார்படுத்தலில் ஆளும் கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக நம்பப்படுகிறது.

வரவிருக்கும் அமைச்சரவை மறுசீரமைப்பு, தீவிரமான சூழ்ச்சிகள் மற்றும் மூலோபாய சீரமைப்புகளால் வகைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சர்வதேச விமானநிலையமாக மாறுகின்றது ஹிங்குராங்கொட

கொழும்பு, ஜூன் 27

ஹிங்குராங்கொட விமானநிலையத்தை முழு அளவிலான சர்வதேச விமானநிலையமாக மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இதுவரை விமானப்படை விமானநிலையமாக இயங்கி வந்த இந்த விமான நிலையம் சர்வதேச விமானநிலையமாக மாற்றப்படவுள்ளது. இதற்கென குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றப்படுமாயின் இலங்கையின் நான்காவது சர்வதேச விமானநிலையமாக ஹிங்குராங்கொட விமான நிலையம் விளங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-25-6)

## வியட்நாமுடன் கல்வி ஒப்பந்தம்

இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையிலான கல்வி ஒத்துழைப்புகள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2024-2026 வரையான காலப் பகுதியில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இருதரப்பினராலும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் உயர்கல்வித் துறையில் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் தொடர்பான தகவல்கள் மற்றும் அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்ளல் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## சத்திரசிகிச்சை மருந்துக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 27

சத்திர சிகிச்சைகளுக்கு அத்தியாவசியமாகப் பயன்படுத்தப்படும் 'லிடொகெய்ன்' என்ற மருந்துப்பொருளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக சுகாதார அமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மயக்க மருந்து வகை அனைத்து சத்திரசிகிச்சைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. கட்டாயமாக கையிருப்பில் இருக்கவேண்டியதொன்று என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கோழி, முட்டை அவதானம்!

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் கோழி இறைச்சி மற்றும் முட்டையை சுகாதார முறைப்படி சமைத்து உட்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவிவரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பறவைகள் மத்தியில் பரவும் பறவைக் காய்ச்சல், சில சமயங்களில் மனிதர்களையும் தாக்கும் என்பதால் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

தமது பிரதேசங்களில் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகள் காணப்பட்டால், அவை உடனடியாக உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

### நாளை

28.06.2024

**வெள்ளிக்கிழமை**

**ஆனி - 14**

சுபநேரம் : 05.55 - 07.25

ராகுகாலம் : 10.25 - 11.55

### நாளொரு நல்வார்த்தை

**சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் தலையில் கூடுகட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம்.**

-ஸ்டீலி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Allianz

அலியான்ஸ் லங்காவின் வருடாந்த விருது வழங்கும் விழா ஜூன் 13, 2024 அன்று கொழும்பு ஷங்ரிலாவில் ஹோட்டலில் நடைபெற்றது. 450 க்கும் மேற்பட்ட மதிப்புமிக்க விருந்தினர்கள் மற்றும் பிராந்திய பிரமுகர்கள் கலந்துகொண்டு அலியான்ஸ் விற்பனைப் படையின் அர்ப்பணிப்பு மற்றும் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களை சிறப்பிக்கும் ஒரு மாலை நேரமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சிக்கு அலியான்ஸின் ஆசியா பசிபிக் பிராந்திய பிரதம நிறைவேற்று அதிகாரி அனுஷா தவராஜா, அலியான்ஸ் லங்காவின் இயக்குனர்களான சிரோமல் குரே மற்றும் தீப்தி லொகுஆரச்சி அவர்களுடன் அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்காவின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நாட்டு முகாமையாளர், பிரசாந்த் குரோவர், அலியான்ஸ் லைப் லங்கா லிமிடெட் இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயலால் ஹேவாவசம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் விற்பனை குழுக்களுடன் வருகை தந்திருந்தனர்.

இந்த நிகழ்வு அலியான்ஸ் குடும்பத்திற்குள் சிறந்து விளங்குவதற்கான இடைவிடா முயற்சியின் கொண்டாட்டமாக இருந்தது. மேலும் வெற்றிக்காக தொடர்ந்து பாடுபடும் ஒவ்வொரு தனிமனிதனின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை இது எடுத்துக்காட்டுகிறது. பெருமிதமும், தோழமையும், எதிர்காலத்தைப் பற்றிய பொதுவான பார்வையும் நிறைந்திருந்ததாக இந்த மாலைப் பொழுது அமைந்தது.

அனைத்து வெற்றியாளர்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் சிறந்த பங்களிப்புகளுக்காகவும், அலியான்ஸினை உலகின் நம்பர் 1 இன்சூரன்ஸ் பிராண்டாக* வலுப்படுத்துவதற்காகவும் வாழ்த்துக்கள் தெரிவிகின்றோம்.

*இன்டர்பிராண்டின் சிறந்த உலகளாவிய பிராண்ட் தரவரிசை 2023 இன் படி



**M S சுவிமல் பெரேரா**
சாம்பியன்ஸ் இன் சாம்பியன்
பொது காப்பீடுகாப்பீடு



**அரியரத்னம் கிருபாகரன்**
சாம்பியன்ஸ் இன் சாம்பியன்
ஆயுள் காப்பீடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜிந்தனுக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 27

'நாளை முல்லைத்தீவு' எனும் அமைப்பை ஆரம்பித்து, சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்ட முன்னாள் அபிவிருத்தி சங்கத் தலைவரான க.விஜிந்தன் என்பவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் பேஸ்புக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் வகையில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம், புலிகளின் கொடி, தமிழீழ எல்லைகளை குறிப்பிடும் வரைபடங்களை பதிவு செய்ததன் மூலம் நாட்டில் இனப்பிரச்சினை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டினார் என்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கடந்த 19ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜூலை 21ஆம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது காலவரையறையின்றி சிறைக்காவலில் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. சந்தேகநபர் சார்பாக நேற்றுமுன்தினம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர் சார்பில் தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் பிருந்தா சந்திரகேஷ் மற்றும் தம்பிராஜா தயானந்தராஜா ஆகியோருடன் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தை முன்வைத் ததையடுத்து சந்தேகநபரான விஜிந்தன் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு ஏழு நாள்களில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம)


## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு
**பில் கிளாக் (பெண்) உதவியாளர் தேவை.**
தகுதி O/L. மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு
**077 484 5379, 077 025 9877**
(CS/55499) J-1


## ஸ்ரீகாளி அம்பாள் தேவஸ்தானம் - சண்டிலிப்பாய்
## அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது, சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய், ஸ்ரீகாளி அம்பாள் தேவஸ்தானம், கடந்த 20.04.2024 முதல் ஊர்ப் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.

(CS/828) J-1

**நிர்வாக சபையினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## பதின்னான்காம் ஆண்டு நினைவஞ்சலி
## சுமங்கலி (பொன்ரதம்) விவேகானந்தன்
**27.06.2024**



எம்மை விட்டுப்பிரிந்து பதின்னான்கு
- ஆண்டுகள் ஓடிவிட்டன
ஆனாலும் எங்களால்
- மறக்கமுடியவில்லை
ஒவ்வொரு விசயமும் உங்களை
- நினைவு படுத்துகின்றது
உங்கள் நற்பண்புகள் எல்லார்
- மனதிலும் பதிந்துவிட்டன

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர்,
சகோதர சகோதரிகள்,
மருமகள், பெறாமக்கள்,
மைத்துனர்கள், சித்தி.

(cs.55466) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1947



மறைவு 24 . 06 . 2024

### கனகரத்தினம் செல்வபாக்கியம்

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளானை கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் செல்வபாக்கியம் கடந்த (24.06.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், வைரவநாதன், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் மகேந்திரநாதன், கனகாம்பிகை, சாரதா, சுஜீந்தினி, கிருஸ்ணநாதன், தயாளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகசுகந்தினி, திருமகள், பாலச்சந்திரன், ஜெயகணேசன், ருக்குமாரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜதுர்ஷன், ஜனுஷ், கிருஷிகா, கிஷான், நிக்சனா, மாதங்கி, லசிகா, மகிழன், அபிராமி, ஜெயக்ஷா, ஜெய்தவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**கிளானை கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பழை.**

(cs.824) (N-1)

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 190 2352**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 09 . 1949



மறைவு 25 . 06 . 2024

### கணபதிப்பிள்ளை பரமநாதன்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமநாதன் நேற்று முன்தினம் (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நிர்மலாவின் பாசமிகு கணவரும், சநாதநி, கார்த்திகாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகாமசுந்தரி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகாலிங்கம், மனோகரன், றோகினி, சரவணபவானந்தன் (செல்லப்பா), சித்திரா, சுபத்திரா,ஶ்ரீதரன், குணசேகரன் ஆகியோரின் மைத்துனரும், மயூரன், ஜெய்ராம் ஆகியோரின் மாமனாரும், யர்ஸ்வின், திகழ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கருவப்புலம் ஒழுங்கை,**
**4ம் உப ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/55497) J-1

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 . 10 . 1949



மறைவு 28 . 05 . 2024

கடந்த 28.05.2024 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் துரைராசா கந்தசுவாமி

*திதி: அபரபக்க பஞ்சமி*

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (27.06.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் மறைந்த செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையம் வைத்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனதார நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வேலாயுதம் வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

(CS/55475) J-1

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1938



மறைவு 24 . 06 . 2024

## சிவசுப்பிரமணியம் இராசம்மா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் இராசம்மா கடந்த 24.06.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானக்குட்டி - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், யசோதா (சுவிஸ்), கிரிஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), புவிதா (சுவிஸ்), மாலதி (கோண்டாவில்), காலஞ்சென்ற றோகிணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயரத்தினம் (சுவிஸ்), தயாபரன் (பிரபல வர்த்தகர் கோண்டாவில்), பிரபாகரன் (சுவிஸ்), மகாதேவா (கோண்டாவில்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நடராசா, நாகலிங்கம் மற்றும் செங்கமலம், சிவயோகம் ஆகியோரின் சகோதரியும், ஜெகதீஸ்வரன், விக்னேஸ்வரன், ஜெயக்குமாரி ஆகியோரின் மைத்துனியும், வித்தகன் (சுவிஸ்), வியாபவன் (சுவிஸ்), மதீபன் (ஆசிரியர்), பிரசாத், லக்ஸ்மன், கீர்த்திகன், சுவேதிகா (கனடா), மதுர்சன் (சுவிஸ்), மாதவன் (சுவிஸ்), பிரியந்தன், கீதப்பிரியன், அபிநயா (சுவிஸ்), யாழினி, சரண்யா, கல்யாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அதித்தனன், ஆரத்யா, பிரிணிதா, பிறிமிகா, ஆதிரன், மித்திரன், ஆருத்திரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

(CS/55490) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**இ.தயாபரன் (மகன்) 077 970 9680**
**க.மகாதேவா (மருமகன்) 077 987 4486**



# 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திருமதி

## கௌரி சிவகுமார்

**(B.A. Honours Economics)**

**27.06.2024**

**ஆசிரியர் சேவைக் காலம்**

- 1989 - 1998 - புத்தளம் கட்டைக்காடு தமிழ் மகா வித்தியாலயம்.
- 1998 - 2013 - யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி.
- 2013 - 2024 - யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

இன்று அகவை அறுபதையும் ஆசிரியர் சேவையில் முப்பத்தைந்து வருடங்களையும் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் எனது அத்தை அவர்களை நோய்நொடி இல்லாமல் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று முத்துமாரியம்மன் பாதங்களை வேண்டி நிற்கின்றேன்.

Congratulations

வாழ்த்துபவர்:
**மருமகள் - சு. ஹிரண்ஜாயினி**
**மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.**

(cs 55501) (N.1)

# Vacancy Announcement

CANE – Sri Lanka, is a volunteer organization, involve in cancer control, palliative care and end of life care activities. We are seeking a dedicated 'Community Project Coordinator' that would be part of the community workforce to assist with the delivery of health camp and implementation of a community-based cancer education and early detection program in the Northern Province of Sri Lanka.

- **Education** : A Degree in any discipline from a University recognized by UGC.
- **Added advantage** : At least 3 years of experience in project management, preferably in Community health.
- **Skills** : Strong leadership, organizational, and communication skills. Ability to work independently and as part of a team. Proficiency in English, both written and speaking are essential. Speaking Tamil and Sinhala are advantage.
- **Attributes** : Deep commitment to promoting health and empowering communities.

**General conditions**

- Age should be below 40 years, on the date closing application.
- Must have valid driving license

**Preference will be given to candidates residing in and around Northern Province**
**This position holder has to report functionally oncology in charge of the Cancer early detection center (CEDC) teaching hospital Jaffna and hierarchically to Chairman, Board of management CANE Sri Lanka.**

**Selection Criteria**

- Demonstrated ability in project management within community-based settings.
- Experience with logistical and resource management for community events.
- Proven track record of successful team leadership and stakeholder collaboration.

**Duration of the Appointment:**

Appointment will be made initially for 12 months and extendable base on the performance.

**Remuneration:**

A monthly salary of LKR 60,000.00 and you will contribute 8 % of your salary towards the employee's provident fund and the employer will contribute 12% of your salary towards employee's provident fund and 3% towards employee's trust fund.
**If you are an interested candidate, you have been requested to send your updated CV with two non – related referee's details to the following e-mail or the mailing address on or before 15.07.2024.**

**e-mail address:** cane_jaffna@yahoo.com
**Mailing address:** CANE – Sri Lanka, No.05, Sabapathipillai Lane, Uduvil, Chunnakam.

See the QR code for more details
f → Anpaalayam Cane
→ 0212240258.

(CS/55500) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எங்களின் பாரம்பரியங்களை உலகறியச் செய்யவேண்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

**எமது மண்ணின் தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் நாமே பாதுகாக்கவேண்டும். எமது வளங்களுக்கு புத்துணர்வூட்டி பாரம்பரியத்தை மீட்டெடுத்து பொருளாதாரரீதியாக முன்னேறவேண்டும். போட்டி மிகு சர்வதேச சந்தையில் கால்தடம் பதிக்கவேண்டும்.**

-இவ்வாறு சங்கானையில் 'அம்மாச்சி' உணவக திறப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பாரம்பரியத்துக்கும் அந்த நாட்டின் உணவுகளுக்கும் அதற்கென்று ஒரு மரியாதை உண்டு. ஆனால் இன்றைய இளைய சமுதாயம் அதற்கு பெறுமதி சேர்க்காமல் திடீரென எங்களிடம் வந்து புகுந்து இருக்கின்ற அந்நிய கலாசாரங்களை உள்வாங்கிக் கொள்வதிலே வேகத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் இந்தியாவை எடுத்துக்கொண்டால் இந்தியாவின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் அந்தந்தப் பிராந்திய உணவுகளே பிரபல்யம்.

சீனாவின் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால் உலகமே வியந்து பார்க்கின்றது. அதற்குப் பொருளாதார அடிப்படை என்னவென்றால் அவர்கள் தங்களுடைய கலையையும் கலாசாரத்தையும் வரலாற்றையும் தங்களுடைய ஒவ்வொரு விடயங்களையும் சந்தைப்படுத்தல் செய்கின்றார்கள்.

ஒவ்வொரு பிராந்தியங்களுக்குமான வெவ்வேறு தனித்துவங்கள் காணப்படுகின்றன. எனவே, எமது மண்ணின் தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் நாமே பாதுகாத்து பொருளாதார ரீதியாக முன்னேறவேண்டும். வடக்கு மாகாணத்தில் தனித்துவமாகத் திகழும் 'அம்மாச்சி' பாரம்பரிய உணவகங்கள் ஊடாக தொடர்ச்சியாக மக்களுக்கான தரமான, சுவையான உணவுகள் வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-26-125)

---

சாவகச்சேரியில்

# பிரமாண்ட மாவிலை

யாழ்., ஜூன் 27

மாமரத்தின் இலை ஒன்று வழக்கத்துக்கு மாறாக மிகப்பிரமாண்டமாக வளர்ச்சியடைந்து காணப்படுகின்ற அதிசயம் சாவகச்சேரியில் நிகழ்ந்துள்ளது.

சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள வீடொன்றின் முற்றத்தில் நிற்கும் மாமரத்தின் இலை ஒன்றே இவ்வாறு பிரமாண்டமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

சாதாரணமாக ஒரு மாவிலையானது 34 சென்ரிமீற்றர் நீளமுடையதாகவே இருக்கின்ற பொழுதும் இந்த மா இலையானது சுமார் 60 சென்ரிமீற்றர் நீளமும் 20 சென்ரிமீற்றர் அகலமும் உடையதாக காணப்படுகிறது.

இதனை அந்தப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். (ச-25-27)

---

அனலைதீவு இறங்குதுறையில்

# கொட்டப்பட்ட மண்ணை மீள எடுப்பதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

அனலைதீவு - இறங்குதுறைமுகத்தில் கொட்டப்பட்ட மண்ணை அகற்றவேண்டாம் என அந்தப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் இடிபாடுகளான கற்களும், மண்ணும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, இறங்குதுறைப் பகுதியில் கொட்டப்பட்டன.

கொட்டப்பட்ட மண் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தின் அனுமதியின்றிக் கொட்டப்பட்டுள்ளதாகக் கூறி அதனை அகற்றுமாறு ஆலய நிர்வாகத்துக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினர் வாகனங்கள் மூலம் மண்ணை மீள எடுக்கமுனைந்தபோது பொதுமக்களும், பொது அமைப்புகளும் ஒன்றுகூடி, படகுப் போக்குவரத்துச் சேவையை முற்றாக நிறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்து கடலரிப்புக்குள்ளாகும் இறங்குதுறையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சருக்கு யாழ். மாவட்டப் பிரதிநிதிகளினூடாக மனுவொன்றையும் அனலைதீவு மக்கள் கையளித்தனர். (ச-25-13)

---

# உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குக

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் கீழ் உப உணவுப் பயிர் செய்கைத் திட்டம் ஒன்றைத் தொடங்குமாறு அந்தப்பகுதி விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குளத்தின் நீர் தற்போது திறந்து விடப்பட்டிருக்கும் நிலையில் அதனை வீண் விரயமாக்காமல் குறைந்தது 50 ஏக்கரிலாவது உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இதற்கான அனுமதியை பூநகரி பிரதேச செயலாளர் வழங்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25-13)

---

# இந்திய ரோலர் படகுகளால் கோடிக்கணக்கில் இழப்பு!

## கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகள் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 27

இந்தியாவின் அத்துமீறிய ரோலர் படகுகளால் எமது வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் ஒரே நாளில் கோடிக்கணக்கில் இழக்கப்படுகின்றது. இதற்குத் தீர்வு காண்பதில் கடற்றொழில் அமைச்சு பாராமுகமாகவே உள்ளது.



-இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்லாயிரம் இந்திய ரோலர் படகுகள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து எம் மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடுகின்றன.

கடந்த சனிக்கிழமை 3 ரோலர் படகுகளுடன் சுமார் 21 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுண்டிக்குளம் தொடக்கம் நெடுந்தீவு வரையான கடற்பரப்பில் ஒரே நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய ரோலர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தியன் ரோலர்கள் எல்லை தாண்டி எமது கடற்பரப்புக்குள் நுழையும் போது சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட எமது மீனவர்களின் வலைகளை அறுத்து நாசமாக்குகின்றனர்.

இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சு காத்திரமான நடவடிக்கை எடுக்காதுள்ளதனாலேயே எமது வளங்கள் அழிக்கப்படுகின்றன - என்றார். (ச-25-20)

---

# எட்டாக்கனியாக அடிப்படை வசதிகள்

## நடவடிக்கை எடுக்குமாறு சுதந்திரபுர மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு - சுதந்திரபுரம் கிராமம் அபிவிருத்திப் பணிகளை எதிர்நோக்காது அடிப்படை வசதிகளேதுமின்றிக் காணப்படுவதால் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அபிவிருத்தி முன்னேற்றங்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஏ-35 சாலையில் இருந்து சுதந்திரபுரம் கிராமத்துக்கு செல்லும் 8 கிலோ மீற்றர் தூரங்கொண்ட கொங்கிறீட் வீதி பெருமளவில் சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

சீரான வடிகால்கள் இல்லாததன் காரணமாக மழை காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகின்றது. ஆயிரம் குடும்பங்கள் வாழும் மேற்படி கிராமத்துக்கு பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. அருகாமையில் மருத்துவ வசதிகள் இல்லாததன் காரணமாக நீண்ட தூரத்திலுள்ள மருத்துவ மனைக்குச் செல்லவேண்டியுள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் எமது கிராமத்துக்கான அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-25-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த விவகாரம்

# இந்தியாவிடம் முறைப்பாடு; தீர்வு காணுமாறு கோரிக்கை

**கொழும்பு,ஜூன் 27**

**இந்திய மீனவர்களைக் கைதுசெய்ய முற்பட்ட போது இலங்கைக் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த சம்பவத்தை இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு இலங்கை அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.**

இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை நேற்று முன்தினம் சந்தித்த போது கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி விளக்கியுள்ளார்.

அத்துமீறிய மீன்பிடியால் கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும் பல பிரச்சினைக்கு இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுகளைத் தொடர்பு கொண்டு நிரந்தரத் தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பல வருடங்களாக பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்ற போதும் இதுவரை உரிய தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அதன் காரணமாக வருடத்துக்கு சுமார் 10 ஆயிரம் கோடி ரூபா அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுகிறது என்றும் இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி எடுத்துரைத்துள்ளார். (ச-இ)




- புலமைப்பரிசில்கள் (Scholarships)
- IELTS தள்ளுபடிகள்
- மலிவான கல்வி கட்டணம்
- கலந்தாய்வு இலவசம் (No consultant fees)
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

பதிவு செய்து கொள்ள கீழே உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
077 740 6793 | 0112 827 320
www.icfs.lk


# தொழிற்சங்கப் பிரச்சினைக்கு ஒரேகுடையின் கீழ் தீர்வு

*நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு,ஜூன் 27

ஒவ்வொரு துறையிலுமுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தனித்தனியாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, முழுமைக்கும் தீர்வை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. இதற்காக முறையான முறைமை பின்பற்றப்படுகின்றது.

-இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் காலங்கள் வரும்போது கோரிக்கையை வென்றெடுக்கும் சூழல் உருவாகும் என்பதை தொழிற்சங்கங்கள் நன்கு அறிந்து அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திப் போராட்டங்களை முன்னெடுக்கின்றன.

அரசாங்க ஊழியர்களின் தொழில் வாழ்க்கையில் நியாயமான பிரச்சினைகள் இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது.

இதற்கெல்லாம் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள குழுவினூடாக நியாயமான பதில் வழங்கப்படும். தனித்தனியாக தீர்ப்பதற்குப் பதிலாக, முழுமைக்கும் தீர்வை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு- என்றார். (ச-இ)

# புலிகளை அழிக்கும் எண்ணம் 2005 இல் மஹிந்தவுக்கில்லை

*கூறுகிறார் சம்பிக்க*

மன்னார்,ஜூன் 27

எம்மைப் போன்றவர்கள் இருந்ததால்தான் மஹிந்தவால் போரை முடிக்க முடிந்தது. நாம் இருந்திருக்காவிட்டால் போரை முடித்திருக்கமாட்டார்கள். விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மஹிந்த ராஜபக்ச 2005 இல் இருக்கவில்லை.

- இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் 2005 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதித் தேர்தல்களை வழிநடத்தி வருகின்றேன். 2005 இல் மஹிந்தவின் தேர்தல் நடவடிக்கை தொடர்பான குழுவில் இருந்தேன். 2010 இல் மஹிந்தவின் தேர்தல் நடவடிக்கை தொடர்பான பிரதான குழுவில் இருந்தேன். பஸில் ராஜபக்ச பிரதானியாகச் செயற்பட்டார்.

2005 இல் புலிகளை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் மஹிந்த ராஜபக்சவிடம் இருக்கவில்லை. பேச்சு நடத்த வேண்டும் என்ற மனோநிலையிலேயே இருந்தார் - என்றார். (ச-44)

# தங்க ஜெல்லுடன் அறுவர் கைது

கொழும்பு,ஜூன் 27

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 18 கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் உருண்டைகளுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமது உடல்களின் ஆசனவாய் மற்றும் பயணப்பொதிகளில் மறைத்து வைத்துக்கொண்டு வந்தபோதே விமான நிலைய சுங்க அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

கிளிநொச்சி ஸ்ரீகிருஷ்ணர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் நேற்றுப் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. வசந்த மண்டப பூசைகளைத் தொடர்ந்து கிருஸ்ணர் உள் வீதி வலம் வந்து தேரிலே எழுந்தருளினார். *(ச-113)*



## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

கொழும்பு,ஜூன் 27

நிவித்திகல - பாதகட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்த போது இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பூநகரி கோட்டமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்கள் மூன்று பிரிவுகளில் வெற்றியைத் தனதாக்கியுள்ளனர். 20 வயதுப் பிரிவு மற்றும் 18 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தையும், 16 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்று வலய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-25-13)



அராலி மேற்கு. வட்டுக்கோட்டை நீளத்திக்காடு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வேட்டைத்திருவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. துஷ்யந்தக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள்கிரியைகளை நடத்தி வைத்தனர். (ச-25-27)





# உணவுக் கண்காட்சி

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் 'போஷாக்கான உணவை எவ்வாறு தயாரிக்கலாம்' எனும் கருப்பொருளிலான உணவுக்கண்காட்சி நிகழ்வு புதுக்குடியி ருப்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி ம.கெங்காதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ச-25-13)





மன்னார் - பேசாலையில் கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் கருத்தமர்வு நிகழ்வு, பேசாலை பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் அன்ரன் பெல்டானோ தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் மன்னார் கால்நடை மருத்துவ அதிகாரி திருமதி ஏ.ஜே.மரியதுரம் கலந்துகொண்டு கால்நடையாளர்களுக்குத் தெளிவூட்டினார். (ச-25-60)


# கேள்வி அறிவித்தல்
## மேலதிக முத்திரைத் தீர்வை 2023
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017. தொலைநகல் 021-2240327)** எனும் முகவரியில் **எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.06.27 தொடக்கம் 2024.07.10 வரையான காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3.500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்.பிரதி) 2024.07.11ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர். உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு. வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.07.04 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/Stampduty/2024/01 | புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் வீதி புனரமைத்தல் (பகுதி 1) | 2.12 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 11.09.2024 | 22,000.00 | 09.10.2024 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/Stampduty/2024/02 | சோமாரம்தோட்ட முதலாம் குறுக்குத் தெரு | 1.27 | 60 | C8 and C9 (வீதிகள்) | 49 | 28.08.2024 | 13,000.00 | 25.09.2024 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின். பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii)

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**27.06.2024.**

(CR/42716) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடன்...

மக்கள் எடுக்கும் முடிவு, ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து இப்போது மீண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்த எந்தவொரு நாடும் இவ்வாறு மீண்டெழுந்ததாக வரலாறு இல்லை. அதை நான் சாத்தியப்படுத்தியிருக்கின்றேன். ஆதலால், தம் எதிர்காலம் தொடர்பில் மக்கள் சிந்திக்கவேண்டிய தருணம் இது. ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப் புரிந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையைப் புரிந்துகொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப்பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா? நீங்கள் சரியான பாதையில் சென்று உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை மேம்படுத்துவீர்களா? அல்லது பயணத்தை மாற்றவேண்டுமா?

தவறான பாதைக்குத் திரும்பினால் அல்லது தவறான பாதையில் பயணித்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே சரியான முடிவை எடுங்கள். அந்த முடிவை எடுக்க உங்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. உங்கள் முடிவு ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது. நாட்டின் எதிர்காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப்போகிறது.

பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க எனது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை. நான் நியமித்த அரசாங்க அதிகாரிகளும் இருக்கவில்லை. அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால், அவை எதுவுமேயில்லாமல், உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் இரண்டு வருட காலத்தில் நாட்டை சுமுகமான நிலைமைக்குக் கட்டியெழுப்ப என்னால் முடிந்தது. அதை யோசித்துப் பாருங்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு வீதிகளில் எவற்றைக் கண்டோம்? இன்று எதனைக் காண்கிறோம்.

ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கை அன்னையை மீட்டுத் தருவதாக அன்று நான் வாக்குறுதி அளித்தேன். குழந்தையைப் பத்திரமாக மீட்டு வந்திருக்கிறேன். இப்போது என்ன நடந்தது? 'ஹுனுவடயே' நாடகத்தில் வருவதுபோல், குழந்தையைக் காக்க எந்த ஆதரவும் தராத குழுக்கள் தற்போது குழந்தையின் உரிமையைப் பெறப் போராடுகின்றனர். தொங்கு பாலத்தைக் கடக்கும் முன் குழந்தையை சொந்தமாக்க முயற்சிக்கிறார்கள். குழந்தையை இருபக்கமாக அன்றி அனைத்துப் பக்கங்களிலும் பிடித்து இழுக்கின்றனர்.

நாம் அறிந்த 'ஹுனுவடயே' நாடகத்தின் நிறைவில், குழந்தையின் உரிமை உண்மையான தாய்ப்பாசமுள்ள அன்னைக்குக் கிடைக்கிறது. 'தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்க வேண்டும். குதிரை சரியான வண்டியோட்டியிடம் கொடுக்கப்படவேண்டும்' என்று நாடகத்தின் கதாசிரியர் கூறுகிறார். அந்தக் கதையில் வரும் நீதிபதி அஸ்டக்கைப் போன்று நீங்களும் சரியான முடிவை எடுக்கவேண்டும். அப்போது தகுயான வருக்குத் தகுதியானது கிடைக்கும். நமது நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிட்டட்டும் - என்றார். (அ-ம-26)

## தம்மிக்க...

யல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது என்பதில் பெரமுனவுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. அமைச்சர் பிரசன்ன உள்ளிட்ட பலரும் ரணிலையே பெரமுன பொதுவேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், பெரமுனவின் நிபந்தனைகள் பலவற்றை ரணில் ஏற்க மறுத்துள்ளார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தொழிலதிபர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது

விசேட கூட்டமொன்றை நடத்தி, வேட்பாளரை அறிவிக்கவும் பொதுஜன பெரமுன திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினால் அது கட்சியின் எதிர்காலத்துக்கு ஆபத்தாக அமையக்கூடும் என்பதாலேயே மொட்டுச் சின்னத்தில் வேட்பாளர் ஒருவரை களமிறக்க பெரமுன தீர்மானித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா மறுப்புத் தெரிவித்தால், ராஜபக்ச ஒருவரையே வேட்பாளராக்கும் முனைப்பில் பெரமுன இருக்கின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## வீதியைச்...

இருக்கின்றது என்று தெரிவித்து மாணவர்களும், பெற்றோரும் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8 மணிமுதல் சுமார் 3 மணித்தியாலங்களுக்கும் மேலாக மாணவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்த போதிலும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைச் சந்திக்காமல் ஆளுநர் அலுவலகத்தைவிட்டு வெளியேறினார்.

அலுவலகத்தைவிட்டு ஆளுநர் சென்ற பின்னர், அவரின் செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பேச்சுக்கு அழைத்து ஐந்து நாள்களுக்குள் இந்தப் பிரச்சினை தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

கொடிகாமம் - தட்டான்குளம் வீதியை சுமார் எட்டு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட மக்கள் பயன்படுத்துகின்றனர். மழைக்காலத்தின்போது இந்த வீதியால் பயணிப்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இதனால், இந்த வருடத்திலாவது தீர்வைத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டோம். ஆனால், ஆளுநர் எங்களைச் சந்திக்கக்கூட இல்லை. 2.34 கிலோமீற்றர் கொண்ட இந்த வீதியின் சீரமைப்புத் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றனர். (அ-ம-125-20)

## தமிழக...

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த தமிழக மீன்பிடிப் படகில் இருந்தவர்களை, நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கைதுசெய்ய முற்பட்டபோது தமிழக மீன்பிடிப்படகு மோதியதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

கடற்படைப் படகில் இருந்து தமிழக மீனவர்களின் இழுவைப் படகிற்குச் செல்ல முயற்சித்தபோது, தமிழக மீன்பிடிப் படகு ஆபத்தை விளைவிக்கும் வகையில் செலுத்தப்பட்டதால் ஏற்பட்ட விபத்திலேயே குறித்த கடற்படைச் சிப்பாய் உயிரிழந்ததார் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

தமிழக மீனவர்கள் 10 பேரும் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய நிலையில், அவர்கள் ஜூலை மாதம் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இந்தச் சம்பவத்தை கொலையாகக் கருதி விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100-66)

## துணைவேந்தர்கள்...

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களையும் கொழும்புக்கு அவசரமாக வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி சாரா ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை அடுத்து எழுந்துள்ள நிலைமைகள் பற்றி ஆராய்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்குடனே பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை அவசரமாகக் கூடுமாறு கல்வி இராஜாங்க அமைச்சரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பின்படி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், வளாகங்களின் முதல்வர்கள் மற்றும் நிறுவகங்களின் பணிப்பாளர்களைக் கொழும்பிலுள்ள கல்வி இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்துக்கு இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு வருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ஆசிரியர்கள்,...

நீண்டகாலம் இழுபறியில் கிடக்கும் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வலியுறுத்தியும், கல்விக்கான ஒதுக்கீடுகளிலிருந்து அரசாங்கம் விலகி பெற்றோர் மீது சுமத்தும் சுமைகளைக் கண்டித்தும் அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் நேற்றுப் புதன்கிழமை சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் ஒரு பகுதியாக கொழும்பில் மருதானைச் சந்தியில் இருந்து கோட்டை ரயில் நிலையத்தை நோக்கிப் போராட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்லாயிரம் ஆசிரியர்கள், நிதியமைச்சின் அலுவலகத்தையும் திறைசேரியையும் நோக்கிப் பேரணியாகச் சென்றபோதே, அவர்கள் மீது நீர்த்தாரைத் தாக்குதலும் கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சால் பல நூறு ஆசிரியர்கள் தள்ளுமுள்ளுப்பட்டு வீழ்ந்தனர். சிலர் காயமும் அடைந்தனர். பலருக்கு மூச்சுத் திறணலும் ஏற்பட்டது. அரசாங்கத்தின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கை காரணமாக, இன்றும் போராட்டம் தொடரும் என்று ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

ஆசிரிய சமூகத்தின் மீதான இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து இன்றும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அதிபர்கள், ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-26-66)

## கல்விச்...

அனைத்து அரச பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் இன்று வியாழக்கிழமை வழமை போன்று இடம்பெறுமெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று இரண்டாவது நாளாகவும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள நிலையில் கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது. (அ-ம-66)

## ஜூலை 2...

ஜூலை 2 ஆம் திகதி நாடாளுமன்றம் அவசரமாகக் கூடவுள்ள நிலையில், அன்றையதினம் தெற்கு அரசியலில் சில எதிர்பாராத சம்பவங்கள் இடம்பெறும் என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்போகும் எதிரணி உறுப்பினர்கள் யாரென்பது அன்றையதினம் தெரியவரும் என ஆளுங்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியில் உள்ள எம்.பி.க்களில் 50 வீதமானோர் ஜனாதிபதி ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்துவார்கள் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. தேசிய அரசு உட்பட முக்கியமான சில அரசியல் தீர்மானங்களும் அன்றையதினமே எடுக்கப்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## கோரவிபத்து...

காரணமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் திருத்தப் பணியில் மூவர் ஈடுபட்டுள்ளனர். இதன்போது வீதியால் பயணித்த பார ஊர்தி பேருந்தை மோதித் தள்ளியுள்ளது. இதனால், பேருந்துச் சாரதியும் மேலும் இருவரும் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். நடத்துநரும் பிறிதொருவரும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவியில் ஆசை இல்லை



## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

**கொழும்பு, ஜூன் 27**

**அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்கும் எந்தவொரு திட்டமும் தனக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

சம்பிக்க ரணவக்க அரசுடன் இணையவுள்ளார் எனவும், அவருக்குப் அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது என்றும் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை பொருத்தமான தரப்புகளுடன் மாத்திரமே குடியரசு முன்னணி கூட்டணி அமைக்கும் எனவும், நாட்டை வங்குரோத்து அடைய வைத்தவர்களுடன் கூட்டணி வைக்கப்படமாட்டாது எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டார். (ச-25-44)

# 3,300 வருட பழைமை கப்பல் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 27

3 ஆயிரத்து 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கப்பலொன்றை இஸ்ரேலியப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது உலகின் மிக பழைமை வாய்ந்த கப்பலாகக் கருதப்படுகிறது.

இஸ்ரேலிலிருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் கிழக்கு மத்தியதரைக்கடல் பகுதியில், 1.8 கிலோமீற்றர் ஆழத்தில் இந்தக் கப்பல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது கி.மு. 14 தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என நம்பப்படுகிறது. இந்தக்கப்பல் இதுவரை காலமும் மனிதர்களாலோ, கடல் அலைகளாலோ சேதமடையாமல் உள்ளது குறித்து ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியமடைந்துள்ளனர். 12 தொடக்கம் 14 மீற்றர் நீளமான இந்தக் கப்பலிலிருந்து கிரேக்க சாடிகளும் குவளைகளும் நல்ல நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

வெண்கல யுகத்தின் பிற்பகுதியில் சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்த காலப்பகுதியில் பபிலோன் துறைமுகம் போன்ற சர்வதேச துறைமுகங்களினூடாக கப்பல் கட்டுமானத் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தக் கப்பலைப்பற்றிய ஆய்வின் முடிவில் மேலும் பல தகவல்கள் வெளிவரலாமென இஸ்ரேலிய தேசிய புதைபொருள் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25-6)

# டிஜிற்றல் மயமாகின்றன பௌத்த பாடசாலைகள்

கொழும்பு, ஜூன் 27

பௌத்த பிரிவேணாக்களை (பௌத்த பாடசாலைகள்) டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு அமைச்சரவை அனு மதியளித்துள்ளது.

ஜனாதிபதியும் கல்வியமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த தீர்மானத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பௌத்த பிரிவேணா ஆசிரியர்கள், மாணவர்கள், மதகுருமார் இந்த வளங்களைப் பயன்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# பால் புரையேறி சிசு பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

பால் புரையேறியதால் சிசுவொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த பிரவின் அக்சரா என்ற 40 நாள் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சிசு அசைவற்றுக் கிடப்பதை அவதானித்த வீட்டார், சிசுவை தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது, சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-26)

# மயங்கி வீழ்ந்தவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, மயங்கி வீழ்ந்து சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட முதியவர், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த சீனிவாசம் கோவிந்தராஜ் (வயது- 66) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். கடந்த 15ஆம் திகதி சந்தையில் மீன் வாங்கிவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தபோது அவர் மயங்கி வீழ்ந்துள்ளார். முதற்கட்ட சிகிச்சைகளைத்தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம- 26)

# மின் தாக்கியதில் இருவர் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 27

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் மின்சாரம் தாக்கியதால் பாதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு சந்திப் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்கள் இருவர் குறித்த நிறுவனத்தின் தண்ணீர்த் தொட்டியை சுத்திகரிக்க கட்டட மேற்பகுதிக்குச் சென்றபோது மின்சாரம் தாக்கி கீழே விழுந்துள்ளனர்.

மேலே சென்றவர்களைக் காணவில்லை என அருகில் உள்ள கடையில் பணிபுரியும் ஊழியர், கட்டட மேற்பகுதிக்குச் சென்றபோது அந்த இரு இளைஞர்களும் மின்சாரம் தாக்கி வீழ்ந்து கிடந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம)




கிளிநொச்சி தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி,முழங்காவில் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இந்தப் போட்டி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-13)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் 'நிலையான சமாதானத்துக்கான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரை நேற்றுப்புதன் கிழமை கிளிநொச்சியை வந்தடைந்தது. (25-113)

**வங்கி மீதி வசதி**
**(SHOW MONEY)**
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
**074 173 7684**
CS/77/1

**வீடு, அலுவலக அறை வாடகைக்கு**
சுதுமலையில் 3 அறை, 2 கோல்களுடனான வீடு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்குண்டு (நகர்புற பாடசாலைகளுக்கு, Tuition Centre களுக்கு தூர இடத்திலிருந்து வருபவர்களுக்கு உகந்தது.)
அத்துடன் அலுவலக உபயோகத்திற்கு தனியான மேல்மாடிப் பகுதியும் உண்டு.
(PHI, சட்டத்தரணி போன்றோருக்கு உகந்தது)
**076 789 6016, 074 031 9808**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.